தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20-10-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலை மாணவி உயரம் தாண்டுதலில் மாநில ஜூனியர் தடகளப் போட்டியில் முதலிடம்

கோவை நேரு விளையாட்டரங்கில் 29வது தமிழ்நாடு ஜூனியர் தடகள போட்டிகள் அக்டோபர் 16-18ம் தேதி வரை நடைபெற்றன. இதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவி S.சிபானி அவர்கள் உயரம் தாண்டும் போட்டியில் பங்குபெற்று தங்கப்பதக்கம் வென்றார். அவர் 1.63 மீட்டர் உயரம் தாண்டி தனது முந்தைய சாதனையான 1.61 மீட்டர் உயரத்தை முறியடித்தார். மேலும் அவர் 4x 100 மீட்டர் தொடர் ஓட்டப்பந்தையத்தில் வெங்கலப் பதக்கம் வென்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்திற்கு பெருமை சேர்த்திருக்கிறார்.

மேலும் இவர் ஜூலை மாதம் கும்பகோணத்தில் நடைப்பெற்ற தமிழக மாவட்டங்களுக்கு இடையேயான தடகளப் போட்டியிலும் தங்கம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. S. சிபானியின் சாதனையை வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பொறுப்பு மற்றும் பாதிவாளர் முனைவர் இரா. ஆனந்த குமார் அவர்கள் மற்றும் வேளாண்மைக் கல்லூரி முதல்வர் திரு.மகிமைராஜா ஆகியோர் மனமார பாராட்டினர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்